

# நற்பணி புரிந்த ஞானி

EVELYN RUTNAM LIBRARY JAFFNA
4/9
INDRAPALA COLLECTION OF THE EVELYN RUTNAM INSTITUTE LIBRARY JAFFNA

முதலியார் குலசபாநாதன்

ஒருவர் தமது நாட்டை, மொழியை, சமயத்தை விதந்து கூறுவது இயல்பு, நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசியார் அவர்கள் நாட்டையும், மொழியையும் பற்றி எழுதிய ஆராய்ச்சிகளிற் பெரும் பாலும் நடுநின்ற நோக்குத் தென்படும். 'சுவாமியவர்கள் சிறந்த எழுத்தாளர்; சொல்லாராச்சி வல்லுநர்; இணையற்ற பலபாஷா விற்பன்னர்; கீர்த்திவாய்ந்த பேச்சாளர்; சரித்திரவாராச்சி அறிஞர்; நூற்பதிப்புத் திறம்படைத்தவர்.'

20456

நூலகம்
ஞானப்பிரகாசர் ஆச்சிரமம்
திருநெல்வேலி, : யாழ்ப்பாணம்.
1975

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசியர் 100-வது ஆண்டு விழா
சிறப்பு வெளியீடு:

மானிப்பாய் இராசசிங்கம் சாமிநாதபிள்ளை ஆசிரியருக்கும், காடினர் சிற்றம்பலத்தின் மகள் தங்கமுத்துவுக்கும் அருந்தவப்புதல்வனுக ஞானப்பிரகாசர் 1875-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30-ம் திகதி பிறந்தார். வேலக்கைப் பிள்ளையார்கோயில் மனேசராயிருந்த சாமிநாதபிள்ளையவர்கள் சைவசமயத்தைக் கடைப்பிடித்து ஒழுகிவந்தவராதலின், தன் அருமைப் பிள்ளைக்கு 'வைத்தியலிங்கம்' எனும் நாமத்தைச் சூட்டினுர். ஆனல், அவருடைய இனசனத்தவர்கள் அப்பிள்ளையைக் 'கனகரத்னம்' எனும் செல்லப்பெயரால் அழைத்து வரலாயினர்.

வைத்தியலிங்கம் சிறுபிள்ளையாயிருந்த பொழுது ஒருமுறை மிகவும் கடினமான வருத்தமுண்டாக, 'இவ் வருத்தம் சுகமாகுமாளுல் இப்பிள்ளையைத் தேவனுக்கு ஊழியம்புரிய ஒரு புரொட்டெஸ்தாந்த போதகராய் ஆக்கிவிடுவதாகத் தாயார் ஒருநேர்த்திக்கடன் செய்தார். சாமிநாதபிள்ளை காலஞ்சென்ற பின்னர். அவவிளங் கைம்பெண்ணுகிய தங்கமுத்துவை அச்சுவேலியில் ஸ்ரீ தம்பிமுத்துப்பிள்ளை அவர்களுக்கு விவாகஞ்செய்து வைத்தனர். எனவே, வைத்தியலிங்கமும் தன் தாயாரோடு கத்தோலிக்க சமயத்திற்சேர்ந்து "ஞானப்பிரகாசர்" எனும் மறுநாமம் சூட்டப்பெற்ருர்.

ஞானப்பிரகாசர் அச்சுவேலியிலும், மானிப்பாயிலும் கல்வி பயின்ற பின்னர் சம்பத்திரிசியார் கல்லூரியிற் கல்வி பயின்ருர். இவருடைய சிறியதந்தையார் ஸ்ரீ தம்பிமுத்து அவர்கள் சிறந்த தமிழறிஞராய் அக்காலத்தில் விளங்கினுர். அச்சுவேலியில் ஓர் அச்சியந்திர சாலையைவைத்து நடாத்தி சன்மார்க்க போதினி எனும் சஞ்சிகையினையும் வெளியிட்டுவந்தார். அநேக கத்தோலிக்க நாடக நூல்களைப் பிரசுரித்தவரும் இவரே. தன்னுடைய பெருமகன் தமிழ்க் கல்வியுடன் சமஸ்கிருதமும் கற்கவேண்டுமென்ற நோக்கத்தினுல் பிரம்ம ஸ்ரீ சபாபதிக்குருக்களிடம் அப்பாஷையைக் கற்க அனுப்பி வைத்தார் அன்றியும் ஞானப்பிரகாசர் வயலின் வாசிக்கவும் மத்தளம் அடிக்கவும் இளமையிலேயே கற்றுக்கொண்டார். இக்காலத திற்ருனே வேதகீர்த்தனங்களை இனிமையாகப் பாடும் ஆற்றலையும் பெற்ருர்.

## இளமைப் பருவம்

சிறியதந்தையாருடைய சூழல் ஞானப்பிரகாசருக்கு இளமைப் பருவத்தில் பலவகையில் உதவிபுரிவதாயிற்று. பத்திரிகைகளில் வெளிவரும் ஆராய்ச்சி பொதிந்த விஷயங்களை வெட்டி ஒட்டிவைக்கும் நற்பழக்கத்தையும் சிறியதந்தையாரிடம் இளமையிலேயே ஞானப்பிரகாசர் கற்றுக்கொண்டதால் பிற்காலத்தில் அநேக ஒட்டுப் புத்தகங்களை அவர் வைத்திருக்கலானார். ஞானப்பிரகாசருடைய இளமைப்பருவ வரலாற்றை அவருடைய சொற்களாலே கூறுவது நன்றாதலின் சிலவற்றை அங்ஙனமே எடுத்துக்காட்ட விரும்புகின்றோம்:

'அந்நாட்களில்', 'கம்பர் வீட்டு அடுப்பும் கவிபாடும்' என்றது போல, சிறியதந்தையாரின் பாவன்மையை அடிக்கடிபார்த்து யானுங் கவிபாடத் தொடங்கி விட்டேன், அவர்குடும்பத்தில் வருத்தமுற்ற போதும், வேறு மங்கல, அமங்கல சமயங்களிலும் ஓர்பக்கத்திற் போயிருந்து ஒவ்வோர் பாட்டு எழுதி வைப்பார். ஒருநாள் அவர் இலாச்சியுள் பாடிவைத்துவிட்டுப் போன பாட்டை யான் எடுத்துப் படித்துவிட்டு அதைப்போல வேறொன்றை எழுதி, வெகு ஆனந்தத்தோடு தாயாருக்குக் காட்டினேன். அவர் "கொப்புவந்து கண்டாய் அடிக்கும். இந்த வயதிலே பாட்டுப்பாட நினையாதே" என்று சொல்லி அதைக் கிழித்துப்போட்டார் ஆயினும் அதிக சந்தோஷமும் துக்கமுமான தருணங்களில் பாட்டு இசைத்து மகிழ்ச்சியும், ஆறுதலும் அடையும் சார்பு என்னைவிட்டு நீங்கவில்லை. பிற்காலம் வேறுதுறைகளில் என்மனஞ்சென்று பரந்துவிடாதிருந்த துண்டாயின், சிறியதந்தையாரைப்போலப் பத்திரசமொழுகும் பாட்டிசைக்கத் தக்கவன்மை ஒர்வேளை எனக்குக் கிடைத்திருக்குமென நம்புகிறேன். கவி இயற்றுவதிற்போல வசன நூல்கள் எழுதுவதிலும் சிறியதந்தையாரின் சேர்க்கை வாசனையால் என்னையறியாமலே எனக்கு விருப்பு உண்டாவதாயிற்று.

"யான் சிறியதந்தையாரிடம் கற்றுக்கொண்ட வேதாபிமானம் சிலவேளைகளில் கடுந்துபோனதுமுண்டு, அதற்காக நல்ல பேச்சும் வாங்கிமுடிந்து கொள்வேன். ஒருநாள் யான், பேரனார் காடினர் சிற்றம்பலத்தார் வீட்டில் இருந்தபோது, ஞாயிற்றுக்கிழமையில் அவருக்கு ஏதோசிறு கைவேலையில் உதவிசெய்துகொண்டு நிற்பதைக் கண்ட அயலகத்தாரான என்பெரிய தாயின் பிள்ளைகள், 'கத்தோலிக்கர் ஞாயிற்றுக்கிழமையில் வேலைசெய்கிறவர்கள்' என்று சொல்லி நகைத்துப் பரிகாசஞ்செய்துகொண்டு நின்றார்கள். இவர்கள் அக்காலம் பரிசேயருக்குநிகரான கடுந்த புரொட்டெஸ்தாந்தர். ஞாயிற்றுக்கிழமைகளிற் கூட்டம் வைப்பதும், சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்வதுமன்றி வேறொன்றுஞ் செய்யார்கள், இவர்கள் கத்தோ

லிக்கரைப் பரிகாசஞ்செய்தது என்றுற் தாங்கக்கூடவில்லை. அந்நேரம் இவர்களுள் இளையபிள்ளை ஒருசிலேற்றும் பென்சிலும் வைத்துக் கொண்டுநின்றுள். அதை யான் வாங்கி அபிமானம் ஆசுகவியியற்றும் வண்மையைக் கிளப்பிவிட

'உன்னைப்பொருளற்று ஊண்தேடிப் பாதிரி உண்மையென்று
திண்ணப் படுத்தும் திமிர்மதர் தேடித் திரிபவர்கள்
வண்ணப் பரிசயர் மாசுறும் ஆயவ ரைப்பழித்து
கண்ணுற் றிடநர கத்தீ யினில்விழல் கண்டிலிரோ'

என்றெழுதி மூத்த சகோதரிமாருக்கு அனுப்பிவிட்டேன். பெரிய தாயார் இதையறிந்து என்னைக்கடிந்துகொள்ள, மூச்சுங்காட்டாது அடங்கிவிட்டேன்.

## ஒருபாடம்

"எடுத்தவுடன் பாட்டு இயற்றுகிற வழக்கம் தீங்குள்ளது என்றதை ஒருநாள் பள்ளிக்கூடத்தில் உவாத்தியாரும் நன்றுய்க் கையிலும் மனதிலும் பதிய எனக்குப் படிப்பித்தார்: வட்டுக்கோட்டைக் கல்லூரியின் உப தலைவராயிருந்த மானிப்பாயில் என்னேடுகூட ஒருவகுப்பிற் படித்தவர். இருவரும் நானும் சில நாட் சிநேகிதராயிருந்தோம் பின் 'கடுஞ்சிநேகம் பகைகாட்ட அவர்என்னைப் பேசிப்போட்டார். நான் வகுப்பிலிருந்து கொண்டு தானே அவரது செயலைக் கண்டித்து ஒருபாட்டெழுதி அவருக்கு நீட்டினேன். அவர் கோபித்துக்கொண்டு எங்களைப் படிப்பித்துக் கொண்டிருந்த மாரிமுத்து உவாத்தியாயரிடம் அதைக்கொடுக்க, அவர், "வகுப்புநேரஞ் செய்கிறவேலை இதுதானு" என்று மிகச் சினந்து கையை நீட்டச்சொல்லிப் பிரம்பினுல் ஒருஅடி தந்தார், அவ்வடி எனதுவிசித்திர வேலைப்பாடுள்ள மோதிரம் தெறித்துப் போகச் செய்துவிட்டது. இதனையே கையிலும் மனதிலும் பதியப் படிப்பித்த பாடம் என்றேன்"

ஞானப்பிரகாசருக்குப் பதினெட்டாம் வயது நடக்கும்போது அவர் நாவலப்பிட்டியிலே தன்தாய்மாமனுருடன் சிறிது காலம் தோட்டவேலை பழகிக்கொண்டிருந்தார். இதற்கிடையில் 1893-ம் ஆண்டு அவர் 'றெயில்வே கிளறிக்கல்' பரீட்சையில் முதலாவதாக தேறியதால், 'கடிகமுவ' என்னும் இடத்தில் சிங்கள ஸ்ரேசன் 'மாஸ்ற்ற'ருக்கு உதவியாளாக நியமனம் பெற்றுர். பின்பு அவருடைய வேலைத் திறமையைக் கண்ட மேலதிகாரி ஒருவர் அவரைக் கொழும்பிலுள்ள தலைமைக் கந்தோருக்கு மாற்றி நியமனஞ்செய்தார்.

## குரு பதவி

ஞானப்பிரகாசர் இப் பதவியிலும் அதிக காலம் இருக்கவில்லை: அவர் குருவாக வந்த வரலாற்றை அவரே ஓரிடத்தில் உணர்ச்சியுடன் கூறியிருக்கிறார் :- "மூன்று வருஷத்துள் உத்தியோகத்தை விட்டுவிட நேர்ந்தது. சிறிய தந்தையாரின் ஒன்றைவிட்ட சகோதரராகிய வண. அந்தோனிச் சுவாமியார் ஏதோ எனக்கறியப்படாத நியாயத்தைக் கொண்டு என்னைக் குரு பதவியிற் சேர்க்க விரும்பிவிட்டார். அவருடைய ஏவுதலால் அதிவண. யூல்ஸ் கொலின் சுவாமியார் எனக்குக் கடிதத்தின்மேல் கடிதம் எழுதி யான் குரு மடத்திற் சேர வேண்டுமென்று நெருக்கிக்கொண்டு வந்தார். குரு பதவிக்கு வேண்டிய பக்குவங்கள் என்னிடம் இருந்ததாக எனக்குத் தோன்றவில்லை. அல்லாமலும் சிறிய தந்தையார் எனக்குச் செய்த உபகாரங்களுக்கு ஏற்க அவருக்கு உதவி செய்து கொண்டிருப்பதே என் கடமை என்று உணர்ந்தேன். ஆயின் கொலின் சுவாமியார் என்னைப் புசலாவையில் வந்து நின்றுகொண்டு கூப்பிட்டு நேரிற் கண்ட பின் மனஞ் சற்று மாறிவிட்டது. அப்போதும் சிறிய தந்தையாருடைய நன்றியை எப்படி மறப்பேன் என்ற தடுமாற்றமே மனதை வாதித்துக் கொண்டிருந்தது. அவரும் முன்னிலும் அதிகமாய் என்னிற் பற்றுதல் காட்டத் தொடங்கிக் கொண்டார். தமது அச்சியந்திரசாலைக்கும் என் பெயரைச் சூட்டி யானே தமக்குப்பின அதை நடத்துவேனென்று நம்பிக்கொண்டிருக்கிறார். ஆறு மாதம் வரையில் இந்த மனப் போராட்டம் நிலைத்து ஈற்றில் யூலஸ் கொலின் சுவாமியார் தம் சகோதரன் சால்ஸ் கொலின் சுவாமியார் மூலமாய் எனக்குச் சொல்லுவித்த ஒரேயொரு வார்த்தையால் மனம் தெளிந்து உத்தியோகத்தைக் கைவிட்டு யாழ்ப்பாணக் குரு மடத்துக்குப் புறப்பட்டேன். காங்கேசன்துறையில் கப்பலா லிறங்கிய யான், நேரே யாழ்ப்பாண மடத்துக்குப் போய்விடவெண்ணி, வழி சென்றாலும் அச்சுவேலிக்குப் போகிற சந்தியில் மனம் மாறவே, வண்டிலைத் திருப்பிக்கொண்டு வீட்டுக்கு வந்ததினால் சிறிய தந்தையார் என்னிற்கொண்ட பேரன்புக்கு மீண்டுமொரு அடையாளங் காணலானேன்.

யான் குரு மடத்திற்குப் போகத் தீர்மானித்திருப்பதை என் சகோதர முறையினரான முதலியார் கனகசபை மூலமாய் ஏலவே அறிந்து கொண்டிருந்தவர், யான் வீட்டுக்கு வந்தபின் மனம் மாறிவிடுவேன் என்றெண்ணினர். ஆயின் இன்னும் அந்தத் தீர்மானத்தோடிருப்பதைத் தாயார் மூலமாய் அறிந்து கொண்டபோது அவர் தீராத் துயரத்துக் குள்ளாகித் தாயாரோடுங் கோலாகலஞ் செய்யத் தொடங்கினர். என்னைத் தேவ தொண்டுக்குச் சமர்ப்பிக்கிறதாக என் சிறு வயதிலே தாம் செய்துள்ள ஒரு பிரதிக்கினையைத்

தாயார் அந்நாட்களில் நினைந்து கொண்டு எனக்காக எவ்வளவாகப் பரிந்து பேசிய போதிலும் சிறிய தந்தையார் மனம் ஆறவில்லை. ஊணும் உறக்கமுமின்றி இறந்து போவாரோ என்ற பயத்தினால் யான் ஒரு ஐந்து வருஷமாவது அந்த நிலையை விட்டிருந்து பிறகு பார்த்துக் கொள்ளுவேன் என்று சத்தியஞ் செய்து கொடுக்கவேண்டிய தாயிற்று. ஆயின், கொலின் சுவாமியார் என்னைப் பட்டணத்துக்கு அழைப்பித்து மேற்றிராணியாண்டவரிடம் என்னைக் கொண்டுபோய்விட, இவர் என்னை மடத்திலேயே நின்று விடும்படியாகக் கட்டளையிட்டு. யான் செய்த சத்தியத்தைப் பற்றிச் சிறிய தந்தையாரோடு தாம் பார்த்துக் கொள்வதாகவும் வாக்களித்தபடியால் சிறிய தந்தையார் சந்தோஷ முகத்தோடு என்னைக் கண்டார்."

## சில தொண்டுகள்

குரு மடத்திற் சேர்ந்தபின் சுவாமியவர்கள் செய்த தொண்டுகள் பல. அக்காலத்தில் தமிழ்ப் பாஷையிற் புதிதாக எழுதப்பட்ட சத்தியவேத நூல்கள் மிகச் சிலவென்றே கூறலாம். சுவாமியவர்கள் சமய சம்பந்தமான நூல்கள் **50**-க்கு மேல் எழுதியிருக்கின்றார்கள். பதிப்பித்த நூல்கள் **30**-க்கு மேல் இருக்கும். **1896**-ம் ஆண்டு தொடக்கம் **1906**-ம் ஆண்டு வரை ''அமலோற்பவ இராக்கினி தூதன்'' எனும் மாதாந்தப் பத்திரிகை யொன்றினை நடத்தி வந்தார்.

**1901**-ம் ஆண்டு மார்கழி மாதம் **1**-ந் தேதி ஞானப்பிரகாசர் குருத்துவப் பட்டம் பெற்றார். பெற்றபின் ஊர்காவற்றுறையிலுள்ள கோயிலொன்றில் குருவாக அமர்ந்தார். அங்கே ஒரு கத்தோலிக்க வாசிகசாலையை நிறுவி, சனங்களுக்கு அறிவூட்டும் பொருட்டு வேத நூல்களை இரவலாகக் கொடுத்து வாங்கும் நூல் நிலையத்தினையும் நடத்தி வந்தார். இதுவே ஊர்காவற்றுறையில் முதன் முதல் ஏற்பட்ட நூல்நிலையம் எனலாம்.

இனி, யாழ்ப்பாணச் சரித்திர சம்பந்தமாகச் சுவாமியவர்களும் முதலியார் இராசநாயகமவர்களும் செய்த தொண்டின் அளவு இம்மாத்திரமன்று. யாழ்ப்பாணச் சரித்திரம் காலத் திரையால் மூடப்பெற்று இருண்மூழ்கி மாசு படிந்து கிடந்தது. இதனை யாம் காண்பதற்கு ஓரளவு வெளிச்சத்தைத் தந்து உதவியவர்கள் இவ்விரு அறிஞர்களுமே யென்பது யாவரும் நன்கறிந்த விஷயம். செகராசசேகரனும், பரராசசேகரனும் இரு சகோதரர்களல்லர்; அப்பெயர்கள் யாழ்ப்பாணத்தரசர்களுக்கு மாறிமாறி யிடப்பட்டு வந்த பட்டத்துப் பெயர்கள் எனத் தமிழுலகிற்கு அறிவுறுத்தியவர் சுவாமியவர்களே. யாழ்ப்பாணத்தரசர்களுக்குப் புறம்பான நாணயங்கள்

(விடையின் உருவமும் 'சேது' என்னும் சொல்லும் பொறிக்கப் பெற்ற முத்திரைக் காசுகள் இருந்தனவென்பதைச் சந்தேகமின்றி நிலைநாட்டிய தனிப்பெருமை சுவாமியவர்களுக்கேயுரியது, போர்த் துக்கேயர் ஆட்சிக்காலத்து யாழ்ப்பாணச் சரித்திரத்தைச் சீராக ஆராய்ந்து வெளியிட்டவரும் சுவாமியவர்களே. யாழ்ப்பாண வைபவ கௌமதியில் சுவாமியவர்கள் எழுதிய 'போர்த்துக்கேயர்: ஒல்லாந் தர்கால வரலாற்றைப் படித்தவர்கட்கு இவ்வுண்மை நன்குபுலனு கும். மயில்வாகனப் புலவர் எழுதிய யாழ்ப்பாண வைபவ மாலை யிற் கண்ட சரித்திர முரண்பாடுகளைச் சுவாமியவர்கள் எடுத்துக் காட்டி, யாழ்ப்பாண வைபவ விமர்சனம் என்னும் சிறந்த ஆராய்ச்சி நூலை வெளியிட்டார்கள். போர்த்துக்கேயர் காலத்து யாழ்ப்பாண அரசர்களைக் குறித்து இவர்கள் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட "Kings of Jaffna" என்ற நூல் சிறந்த ஆராய்ச்சி நிரம்பியதொன் றாகும். இந் நூலைத் தாம் புதுக்கியும் விரித்தும் எழுதிமுடியும் பரு வத்தில் இருப்பதாகச் சென்றவருடம் எமக்கு எழுதிய கடிதமொன் றில் சுவாமியவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். இக்கையெழுத்துப் பிரதியைச் சிதையவிடாது பாதுகாத்தல் வேண்டும். மேலும் வையா எனும் சரித்திரவசன நூலையும் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் பதிப் பித்துதவினார்கள். சங்கிலி அரசனின் கோப்பாய்க் கோட்டையிருந்த இடத்தைக் கண்டுபிடித்தவரும் இவர்களே. நல்லூரில் சங்கிலித் தோப்பு எனும் வளவுக்கு முன்பாகத் தெருவோரத்திற் காணப்படும் பழையவாயிற் கட்டடம் சங்கிலி அரசனின் மாளிகைவாயிலன்று' ஒல்லாந்தர் கட்டிய பழைய கட்டடத்தின் வாயில்என எடுத்துக் காட்டியவரும் இவர்களே, நல்லமாப்பாண வன்னியனாரைப் பற்றி இவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை 'ரோயல் ஏசியற்றிக்சொ சையிற்றி' பத்திரிகையில் வெளிவந்துள்ளது. இடப்பெயர் ஆராய்ச்சி பற்றியும் பலகட்டுரைகள் எழுதியுள்ளார். சுவாமியவர்களுடைய கட்டுரையைத் தாங்கி வெளிவராத பத்திரிகை தமிழ்நாட்டில் இல்லையென்றே கூறிவிடலாம் இன்னும் சரித்திர சம்பந்தமாகத் தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும், ஆதிகாலப் பாப்புமார் சரித் திரம், India's Ancient Chronology and Culture; The Origin of Caste among the Tamils; A History of the Catholic Church in Ceylon; Twenty five years of Catholic Progress in the Diocess of Jaffna; The Historical Aspect of Christianity and Buddhism; ஆதியாம் நூல்களை எழுதியுள்ளார்

## கண்டு பழகிய வரலாறு

சில வருஷங்களுக்கு முன் சுவாமியவர்களை நேரிற் கண்டு சில வரலாற்றுக் குறிப்புக்களைப் பெறவேண்டுமென்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது. அதனை முதலியார் இராசநாயகம் அவர்களிடம் ஒரு நாட்கூறினேன். "அவர்களோடு நீங்கள் பழகியிருக்கவேண்டியதவசியம்" என்று முதலியார் அவர்கள் கூறி, அரசாங்க விடுமுறைக் காலத்தில் யான் யாழ்ப்பாணஞ் சென்றபொழுது, என்னை அறிமுகப்படுத்தி ஒரு கடிதமும் சுவாமியவர்களுக்குத் தந்தார்கள். நல்லூரில் முத்திரைச் சந்தையடிக்குக் கிட்டவுள்ள அர்ச். சவேரியார் கோயிலில் அவர் இருப்பதாக அறிந்தேன். அங்கே சென்றபொழுது கோயிலுக்கு இடது பக்கத்திற் பெரியதொரு அறை காணப்பட்டது. அவ்வறையினுள் அநேக புத்தகங்களைத் தாங்க முடியாமற் சலித்து நிற்கும் 'விருக்கை' களும் அலுமாரிகளும் யன்னலுக் கூடாக வெளியே தெரிந்தன. அந்த அறையின் வாயிலுக்குச் சென்றேன். உள்ளே யிருந்த பழைய நூல்களினதும், ஏடுகளினதும் தொகை நன்கு புலனாயிற்று. அங்குள்ள மேசையொன்றிற் பல நூல்கள் விரிக்கப்பட்டுக் கிடந்தன. அதற்கருகில் கத்தோலிக்க சுவாமியார் ஒருவர் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். வெள்ளிக் கம்பி போன்ற நரை மயிர்; பஞ்சு போன்ற தாடி; புன்னகை தவழும் முகம் யான் வெளியே நின்றதைக் கண்டதும் சுவாமியவர்கள் உள்ளே வரும்படி கூறினார்கள். அப்பொழுது, முதலியார் இராசநாயகம் அவர்கள் இக்கடிதத்தைத் தங்களிடம் கொடுக்கும்படி சொன்னார்' என்று கூறிக் கடிதத்தைக் கொடுத்தேன். "என் அருமை நண்பர் அவர்" என்று சொல்லிக் கடிதத்தை வாசித்ததும் சுவாமியாரவர்கள் என்னை அன்புடன் உபசரித்தார்கள். "ஈழநாட்டுப் புலவர்களைப் பற்றியும். அவர்கள் எழுதி வெளியிட்ட நூல்களைப் பற்றியும் தங்களிடம் சில குறிப்புக்கள் எடுக்கலாம் என்று கருதி வந்துள்ளேன்" எனக் கூறினேன். சுவாமியவர்கள் என்னை இருக்கச் செய்து, தாம் இளமைதொட்டுப் பத்திரிகைகளிலிருந்து வெட்டி ஒட்டி வைத்திருந்த குறிப்புக்களைக் காட்டினார்கள். கத்தோலிக்க புலவர்களைப் பற்றிய பல குறிப்புக்களைச் சுவாமியவர்களிடமிருந்தே பெற்றேன். எனினும் அவரிடமிருந்தவற்றிலிருந்து குறிப்புக்கள் எடுப்பதற்குப் பல நாள் வேண்டும். யான் குறிப்புக்கள் எடுத்துக் கொண்டிருக்கும்பொழுது "இந்தப் புத்தகத்தைப் பார்த்திருக்கிறீர்களா" என்று அடிக்கடி பல புத்தகங்களை என்னிடம் காட்டிக் கேட்டார்கள்.

## அரிய நூல்கள்

அவர்கள் எனக்குக் காட்டிய நூல்களுட் சில யான் பிறப்ப தற்கு முன் இலங்கையிற் பிரசுரிக்கப்பட்டவை. கிடைத்தற்கரிய எத்தனையோ ஏடுகள் அவர்களிடம் இருந்தன. தாம் யாழ்ப்பா ணத்தில் ஏடுகள் தேடிச் சென்று பலமுறை ஏமாற்றமடைந்த வர லாறுகளை நகைச் சுவையுடன் கூறினார்கள். காலை 8 மணியளவிற் சென்ற யான் நண்பகல் 1 மணிவரை அங்கேயே இருந்துவிட்டேன், நேரம் கழிந்ததே தெரியவில்லை. இதன் பின்னர் சுவாமியவர்களை அடிக்கடி கண்டு பழகிக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. எனது சிறு முயற்சியைப் பாராட்டி. அதற்கு உதவி செய்யும்படி சுவாமி யவர்கள் ஈழகேசரியில் ஓர் வேண்டுகோள் விடுத்தார்கள்.

ஒருமுறை சுவாமியவர்கள் சுகமில்லாமல் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் இருந்தார்கள். அத்தருணம் யான் ஏதோ ஒரு அலுவலாக யாழ்ப்பாணஞ் சென்றிருந்தேன். சுவாமியவர்கள் சுக மில்லாதிருப்பதைக் கேள்வியுற்று அவர்களைப் பார்க்கச் சென்றேன். மூளைக்கு வேலைகொடுக்கும் எவ் விஷயத்தையும் சிந்திக்கக்கூடாது என்று டக்றர் கட்டளையிட்டிருந்தார். ஆனால், சுவாமியவர்கள் என்னைக் கண்டதும் டக்றருடைய கட்டளையை மீறி யாழ்ப்பாண அரசர்கள் வரலாறு சம்சந்தமாகத் தாம் ஆராய்ந்த கண்ட உண்மை களைச் சொல்லி அதிக நேரம் சந்தோஷமாகக் கதைத்துக் கொண் டிருந்தார்கள். இதனால் இவர்களுக்கு யாழ்ப்பாணச் சரித்திரத்தில் உள்ள அபிமானம் நன்கு புலனாயிற்று.

யான் அச்சிட எழுதி வைத்திருக்கும் யாழ்ப்பாணத்தரசர்களும் தமிழும் என்னும் நூலுக்கும், பதிப்பிக்கத் தயாரித்துள்ள யாழ்ப் பாண வைபவமாலை எனும் நூலுக்கும் முகவுரை எழுதி உதவினார் கள். இந்நூல்கள் வெளி வருவதற்கு முன் சுவாமியவர்கள் இவ் வுலக வாழ்வை நீத்தமை எமக்குத் தீராத கவலையை உண்டாக்குவ தாய் இருக்கின்றது.

## கலைத் தொண்டு

சொற் கலையாக்கத்துக்குச் சுவாமியவர்கள் செய்த தொண்டினை எடுத்துக் கூறலரிது. திராவிட பாஷையின் சிறப்பை எடுத்துக் காட் டிய அறிஞர்களுள் முன்னணியில் நிற்பவர் சுவாமியவர்களே. பம் பாயிலுள்ள வண ஹைறஸ் சுவாமியவர்கள் மொகஞ்சதரோ எனும் பொருள் பற்றிச் செய்த ஆராய்ச்சியில் ஏற்பட்ட சந்தேகங்களை நிவிர்த்தி செய்ய ஈழநாட்டு ஞானப்பிரகாசரிடமே வந்தார்கள். அச் சந்தேகங்களை ஞானப்பிரகாசர் நீக்கியதுமன்றித் தமிழிலே

குறள்வெண்பா மிகவும் பழங் காலந் தொடக்கமே யிருந்ததெனக் காட்டி அரியதொரு கட்டுரையும் பத்திரிகையில் வெளியிட்டார்கள். தமிழ் அமைப்புற்ற வரலாறு, தமிழ்ச் சொற் பிறப்பாராய்ச்சி, சொற் பிறப்பு—ஒப்பியல் தமிழகராதி, தருக்க சாத்திரசுருக்கம் ஆகிய நூல்களே சுவாமியவர்கள் இத் துறையிற் செய்த பணியை ஓரளவுக்கு எடுத்துக்காட்டும் சான்றுகளாகும். சுவாமியவர்கள் தமிழுக்காக ஆற்றிய தொண்டுகளுள் தலைசிறந்து விளங்குவது, அவர்கள் அச்சிடத் தொடங்கிய சொற்பிறப்பு—ஒப்பியல் தமிழகராதியாகும்: தமிழ் அகராதியை அச்சிடுவதற்குச் சுவாமியர்கள் பட்ட கஷ்டங்களை யான் நன்கறிவேன். அகராதி அச்சிடுதலாகிய பாரிய வேலையைத் தமது கையினால் மட்டும் செய்யத் துணிந்தார்கள். பிரதி செய்வதற்குக் கூடத்தானும் எழுத்தாளர் உதவி கிடையாது. சிங்கள அகராதியொன்றை வெளியிட இலங்கை அரசாங்கம் இதுவரை எத்தனை ஆயிரம் ரூபாக்களைச் செலவிடலாயிற்று. அவ்வளவு தொகையான பணஞ் செலவாகியும் 'மலையைக்கல்லி எலியைப் பிடித்தவாறு இரண்டு மூன்று பாகங்களே இதுவரை வெளிவந்துள்ளன அரசாங்கமே தலையிடுவதற்குப் பயப்படக்கூடிய இப்பாரிய வேலையை நம் சுவாமியவர்கள் செய்து முடிப்பதாகக் கங்கணங்கட்டி வேலை செய்து ஓரளவு வெற்றியும் பெற்றுவிட்டார் என்றே கூறலாம். இத் தொண்டில் அரசாங்கசபை அங்கத்தவரும், தமிழறிஞருமாகிய ஸ்ரீமான் சு. நடேசபிள்ளையவர்கள் செய்த உதவியும் மறக்கற்பாலதன்று: கல்வி நிர்வாகசபை வருடந்தோறும் கொடுத்து வந்த 1,000 ரூபாவை இரண்டாயிரம் ரூபாவாக உயர்த்துவதற்கு ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை பெரிதும் முயன்றார்கள். மேலும் ஸ்ரீமான் நடேசபிள்ளை அவர்கள் சுவாமியவர்களுடைய அகராதி விஷயத்திற் காட்டி வந்த ஊக்கத்தைச் சுவாமியவர்களே பலமுறை எமக்கு எழுதிய கடிதங்களிற் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர்கடன்

சுவாமியவர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம், மலையாளம், லத்தீன், கிறீக், ரோமன், போர்த்துக்கீஸ், டச்சு ஜேர்மன் ஆதியாம் பல பாஷைகள் கற்றவர். இப்பாஷையறிவு அகராதி ஆக்கும் விஷயத்தில் சுவாமியவர்களுக்குப் பெருந்துணையாயிருந்தது.

சுவாமியவர்கள் கோவைக்குச் சென்றபொழுது, அங்கே இலங்கைச் சரித்திர சம்பந்தமான பல விஷயங்களை ஆராய்ந்தறிவதற்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்தது. சுவாமியவர்களுடைய புகழ் இச்சிறுதீவில் மட்டுமன்றிக் கடல் கடந்து மேனாடுகளிலும் பரவியது சுவாமியவர்கள் பெயர் ஜேர்மனி தேசத்துக்கு எட்டியபொழுது, அங்குள்ளார் சுவாமியவர்களுடைய அறிவைப் பாராட்டியதுமன்றி

சுவாமி அவர்களை ஞாபகமூட்டும் பொருட்டு அரசாங்கம் அவர்களுடைய படம் பொறிக்கப்பெற்ற முத்திரைகளும் வெளியிட்டது.

சுவாமியவர்கள் இலங்கைப் பழைய நாணயங்களைச் சேகரிப்பதிலும் அதிகம் முயன்று வந்தார்கள், இதன் பயனாக அநேக பழைய காசுகளைச் சேகரித்து வைத்திருந்தார்கள்.

இங்ஙனம் தமிழன்னைக்குப் பல வழியாலும் தொண்டாற்றி வந்த சுவாமியவர்கள் பிரிந்தமை யாவர்க்கும் வருந்தந் தருவதேயாகும். இனி, சுவாமியவர்கள் அச்சிடத்தொடங்கிய தமிழ் அகராதியை முற்றாக அச்சிட்டு நிறைவேற்றுதல் தமிழர் கடனாகும். மேலும் காலஞ்சென்ற எஸ். ஆர். முத்துக்குமாரு அவர்கள் தொகுத்து வைத்திருந்த இங்கிலிஷ் தமிழ் அகராதியும் சுவாமியவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. இது தந்துவசாஸ்திரிகள், வேதசாஸ்திரிகள், விஞ்ஞான நூலாசிரியர்கள், நீதிமன்றத்தவர்கள் ஆதியோருக்குப் பயன்படக்கூடிய சிறந்த முறையில் அமைந்த அகராதியெனச் சுவாமியவர்களே பாராட்டியிருக்கின்றார்கள், இதனையும் அச்சுவாகனமேற்றச் சுவாமியவர்கள் முயன்றார்கள். இதன் கதி யாதோ? சுவாமியவர்கள் சேகரித்து வைத்திருந்த பழைய அரிய நூல்களையும் ஆராய்ச்சிக் குறிப்புக்களையும், ஒட்டுப்புத்தகங்களையும் ஒருங்கு சேர்த்து அவர்கள் பெயரால் யாழ்ப்பாணத்தில் ஒரு நூல்நிலையத்தை நிறுவுதல் மிகப் பொருத்தமான செயலாகும் அன்றேல் அவற்றைச் சம்பத்திரிசியார் கல்லூரி நூல்நிலையத்திலாதல், யாழ்ப்பாண நகர சங்க நூல்நிலையத்திலாதல், கொழும்பு நூதனசாலை நூல்நிலையத்திலாதல் வைத்துப் பேணுதல் வேண்டும். சுவாமியவர்கள் பாடுபட்டுச் சேகரித்த நூல்கள் ஒவ்வொன்றாக நழுவி மறைந்து விடாவண்ணம் அவற்றிற்குப் பொறுப்பாயுள்ள குருமார் கவனிப்பார்களா? எங்ஙனமாயினும் தமிழ்மாணவர்கள் ஆராய்ச்சிசெய்ய விரும்புங்காலத்து அந்நூல்களைப் பார்க்கக்கூடிய ஒரு பொது இடத்தில் அவற்றை வைத்திருப்பதே விரும்பத்தக்கது. சுவாமியவர்கள் பத்திரிகையிலிருந்து வெட்டி யொட்டிய விஷயங்களும் குறிப்புக்களும் உபயோகப்படாது ஒரிடத்திற்கிடந்து செல்லுக்கிரையாகாது பாதுகாத்தல் அவற்றிற்குப் பொறுப்பாயுள்ளவர்களின் பெருங்கடமையாகும், தமிழ் நூல்களைச் சேகரித்து வைத்திருக்கும் நூல்நிலையம் ஒன்று இலங்கையில் நிறுவப்படல் அத்தியாவசியம் என்பதை யார்தான் மறுக்கக்கூடும்? அத்தகைய நூல்நிலையத்திற்குச் சுவாமியவர்களின் நூல்கள் மூலாதாரமாக அமையுமோ என்னவோ!

முற்றும்.

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

அர்ச். பிலோமினு அச்சகம், யாழ்ப்பாணம்.